**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-25/2020**

List of Witness LW1 Examined as PW 1 (Complaiant)

| | | | |
|---|---|---|---|
| Name | நாகராஜன் | Caste: | |
| Father's name | குருசாமி | Calling: | லோடு மேன் |
| Village | கந்தர்வகோட்டை | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 53 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.01.2024
முதல் விசாரணை

1) நான் தற்போது கந்தர்வகோட்டையில் வசித்து லோடு மேனாக செய்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு, ஒருநாள் முள்ளிகாப்பட்டிக்கு பத்திரிக்கை வைப்பதற்காக, நான் சென்றிருந்தேன். எனது அண்ணன் மகனும் முள்ளிகாப்பட்டிக்கு உறவினரை பார்ப்பதற்காக வந்திருந்தார். என் அண்ணன் மகன் இருசக்கர வாகனத்தில், முள்ளிகாப்பட்டிக்கு கந்தர்வக்கோட்டை நோக்கி வந்தார், விபத்து ஏற்படுத்திய நபர், நெப்புகையில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்தார். மோதி கிடந்ததாக சொன்னார்கள், நான் 108 ஆம்புலன்சிஸ்க்கு போன் செய்து, கந்தர்வக்கோட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அவருக்கு தலை மற்றும் கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது.

2) சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். இது தொடர்பாக நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் நேரத்தில் நான் வேலாடிப்பட்டியில் இருந்தேன் என்றால் சரிதான். விபத்திற்குட்பட்ட நபர் என் அண்ணன் மகன் என்று சொன்னதால் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட இன்னொரு வாகனத்தில் டீசல், டேங் எல்லாம் நசுங்கி இருந்தது என்றால் சரிதான். காயம்பட்ட நபரை நான் கந்தர்வக்கோட்டை அல்லது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான்.

2) நெப்புகை என்ற இடத்தில் கந்தர்வக்கோட்டை- வேலாடிப்பட்டி சாலை கிழக்கு, மேற்காக செல்கிறது. அந்த ரோட்டில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் சாலை, நெப்புகை

சாலை என்றால் சரிதான். அன்றைய தினம் நெப்புகையில் கிடா வெட்டு திருவிழா என்றால் சரிதான். ரோட்டில் நிறைய ஆட்கள் சென்று கொண்டும் போய் கொண்டும் இருந்தார்கள் என்றால் சரிதான். வேலாடிப்பட்டியில் இருந்து மேற்கு நோக்கி வந்து, நெப்புகை செல்ல, வடக்கு நோக்கி திரும்ப வேண்டும் என்றால் சரிதான். என் அண்ணன் மகனும் திருவிழாவிற்கு சென்றார் என்றால் சரிதான். மது போதையில் வந்து, ரோட்டை திடீரென்று குறுக்காக கடந்து, எமஹா வாகனத்தின் மீது மோதி, தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான்.

| **சாட்சியின் கையொப்பம்** |
|---|

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.